வசன இரத்தினாமிர்தம்

470



பண்டித - வ. மு. இரத்தினேசுவரையர்

ஓம் :

வசன இரத்தினாமிர்தம்

ஆசிரியர் :

பண்டித - வ. மு. இரத்திநேசுவரையர்

ஆவினிப்பட்டி :

விவேகானந்தர் கல்விக்கழக வெளியீடு, உ.

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

1935

உ

சிவகுகமயம்

உள்ளுறை அட்டவணை

முன்னுரை

இம் மாநிலமக்கள் இன்பம் மேவ இறைவாருளிய இந்தச் சரீரத்துடன் வாழும் நாளில், அறிவை வளர்த்து அன்பைப் பெருக்கித் துன்பகல் நிலையில் யாவரும் நடக்க வேண்டியது முக்கியக் கடமையாகும். வீண் ஆடம்பரங்கள் தேகத்துடன் போய்விடும். பற்றித் தொடர்வது இருவினைப் புண்ணிய பாவங்களுமே யாகும். ஆதலின், மாந்தர், சாந்துணையும் நற்கல்வி கேள்விகளாலும், தெய்வம் பேணும் மாணெறியாலும், கருணை, அடக்கம், நல் ஒழுக்கம் முதலிய அணிகளாலும் தம்மைச் சிறப்பித்து வாழ்வது பொருத்தமாகும். இவை யாவும் கல்விப் பெருக்கத்தினுல் கவின்பெறும். இவ்வுண்மை நாடிய, அன்பர்: திரு. அ. பழனியப்ப செட்டியாரவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

ஆவினிப்பட்டி,
விவேகானந்தர் கல்விக் கழகம்.
14—2—35.

தமிழ்ப் பண்டிதர் -
வ. மூ. இரத்திநேசுவரையர்.

உரிமையுரை

தண்டிறற் பெருவளமுடைய தண்டமிழ் நாட்டில் பிறந்திருந்தும் மொழிப் பற்றுக் குன்றிய பெரியாரும் பலருளர்; தமிழ்வளங் காணும் பெற்றியற்ற மேனாட்டவராகத் தம்மைக் கருதவாருஞ் சிலருளர். இன்ன நிலையுடையார் தமிழக மாந்தர் பெருமைக்கு முட்டுக்கட்டையாவது அதிசயமன்று!

"பாண்டிநன்னாடு பழம்பதி" என்று புகழ்ந்த அளவில் அறிவினாற்றல் பெறமுடியாது. மொழி, சமயம், சமூகம் என்ற ஆன்ற பகுதிகளில் அரும்பற்றும் பெரும்பணியும் ஆற்றுவார் பிறந்த பயனைப் பேதறலின்றிப் பெறுவர். பாலியரறிவே பிற்காலம் சிறக்க ஏதுவாகும்.

சமூக மாணவ மாணாக்கியர் கல்வியறிவானே மேம்படவும், சமூகம் உயர்வு பெறவும் பெருவிருப்புடைய நண்பர் - திரு. அ. பழனியப்ப செட்டியாரவர்கள் என்னை ஒரு தமிழ்த் தொண்டனாக மதித்துத், தமது விவேகானந்தர் கல்விக் கழகத்தில், ஆசிரியனாக நியமித்து ஆதரித்து வரும் அரிய நன்றியை என்றும் மறவாமை காரணமாக இச்சிறுவசன நூலை உரிமைப்படுத்துகிறேன். அவர்கள் இதனை அங்கீகரித்துக்கொண்டு, சகல செல்வத்துடனும் நீண்ட வாழ்நாளுடனும் வாழச் சண்முக சத்குருநாதனின் தண் மலரடியிணைகளை இறைஞ்சுகிறேன்.

ஆவினிப்பட்டி,
விவேகானந்தர் கல்விக்
கழகம்.
பவ௵ தை௴ உகஉ.

பண்டிதர் -
வ.மு. இரத்திநேசுவரையர்,
யாழ்ப்பாணத்து உடுவில்.

உ
சிவகுகமயம்
திருச்சிற்றம்பலம்

வசன இரத்தினமிர்தம்

அந்தண் பொதிய வகத்தியர் குருபரன்
செந்தமிழ் மாது சிறந்திடப் பணிவமே!
இந்தநல் வசன மினிது திகழவே.

க. கடவுள்

நாம் வசிக்கும் இவ்வுலகம் தோன்றி நின்று மறையுந் தன்மை யுடையது. மண், நீர், நெருப்பு, காற்று, வெளி என்ற ஐம்பெரும் பொருள்களின் சேர்க்கையான உலகமும், ஐந்து பூதக்கலப்பா லுண்டான நமது உடம்பும் ஒரே தன்மையனவே. உலகில் அறிவைப் பெற்ற உயிர்களும், அறிவில் லாத பொருள்களு மிருக்கின்றன. எப்பொருள் களிலும் பாலில் நெய்போலக் கலந்து, அவைகளை நடாத்தும் ஒரு பொருளுண்டு. அப்பொருள் தான் முழு முதன்மையும், முழு வல்லப்மும், முற்றறி வும் உடையது. பிறவாததும் இறவாததும் அவ் வுயர் பொருளுக்கு இலக்கணமாகும். "நாம் ஒன் றெண்ணத் தெய்வம் ஒன்று எண்ணியது" என்று உலகினர் உரைப்பர்.

கடவுள் என்று கூறும் பொருள் மக்களின் மனம், வாக்குக்களுக்கு எட்டாது நிற்பதாகும்.

கட+உள்=கடவுள். ஆனால், மனதினாலே தியானித்தும் வாக்கினாலே துதித்தும், காயத்தினாலே வணங்கியும் அவ்விறைவரது அருளைப் பெறலாம். காயம்=உடல்.

கடவுளின் அருளையே சத்தி என்பர். சத்தியை ஆதாரமாகக் கொண்டு கடவுள், படைத்தல், காத்தல்,அழித்தல், மறைத்தல் என்ற ஐந்து தொழில்களையுஞ் செய்வார். தநு கரண புவன போகங்களை ஆன்மாக்களுக்குக் கொடுப்பது, அவைகள் நல்வழி நாடி நடந்து இன்பம் பெறும் பொருட்டேயாம். தநு=உடம்பு. காரணம்=மனம், புத்தி, சித்தம், அகங்காரங்கள். புவனம்=உலகம்.அவை இருநூற்றிருபத்து நான்காகும். போகம்=அநுபவிக்கப்படும் பொருள்.

கடவுள் அருட் சத்தியை அதிட்டித்து நின்று மாயா புவனங்களை உண்டாக்கி யருளினாலும்,தாம் நிமித்த காரணராகி நிலைபெறுத்துவர். ஒரு குலாலன், மண்ணாகிய முதற் காரணத்தைக் கொண்டு, சக்கர முதலிய துணைக் கருவிகளால் குடத்தை உண்டாக்குவன். அவன் நிமித்தகாரணனாக இருத்தல் உபமானமாகக் கண்டு தெளியலாம்.

இனிக் கடவுள் ஆன்மாக்களை வருந்த விடுவது அநீதி என்பாரு முளர். குற்றஞ் செய்தவர்களின் நன்மை கருதியே, அரசன், பிதா, மாதா முதலினோர் தண்டிக்கின்றனர். ஆனால், இவர்க

ளறிவினும் கடவுள் சிறந்த முற்றறிவுடையர். அவர், ஆன்மாக்களின் மீது வைத்த கருணையால் உருவத் திருமேனி கொண்டு அருள்வதையும், வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்த்த சென்னியுந் தந்தமையையுங் கருதி அப்பெருமானை வழிபட்டாலல்லது, நாம் நலமடைய முடியாது. நாத்தடிப்புள்ள நாத்திகரும் கடவுளின் அருள் கூடிய வழி நலம் பெறுவர். கடவுள் என்ற அரிய பொருளுண்மையை மேனாட்டுப்பண்டிதர்களாகிய ஹோமர், வில்ஸன் என்பவர்கள் எழுதிய நூல்களை ஆங்கில நூலறிஞர் படிப்பது மரபாகும்.

இருள் சேர்இரு வினையுஞ் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

விலகரும் அருளின் மிக்கார் விமலனை வாழ்த்த வேண்
அலகில்பல் யுகங்களே நம்மாயுளாய் மும்மைத்தாய[டின்
உலகமோ ருடம்பாயந்த வுடம்பெலாம் வாயாய் நித்தம்
பலகவி மாலைசூடிப் பாவினும் முடியுங் கொல்லோ.

என்றார் பெரியோர். ஆகவே, கடவுள் ஒருவரே பெரியவராவர். அவர் ஒளியாய் எங்கும் பிரகாசிப்பார். நமது பிறற்றுருத்தியாகிய உடலை நினைத்தாலே கடவுளின் கருணு விசேடம் புலப்படும். அக்கடவுளை மறவாது வழிபாடு செய்து இம்மக்கட் பிறவியைப் பயன்படுத்திக் கொள்ள நாம் முன்னி முன்னிற்போமாக.

உ. அன்பு

அஃதாவது அன்பு இன்ன தன்மைத்தென இயம்பல். என்னை? அன்பு இல்லாத விடத்து உலகியல் வாழ்க்கையும் அதுவே நெறியாகப் பரலோக இன்பமும் அருகிவிடுமாதலி னென்க.

அன்பாவது தொடர் புடையார் மாட்டு மனம் நெகிழ்ச்சி யடைதலாம். அன்புக்கு உருவமில்லை. மக்களின் நெஞ்சில் எஞ்சாத ஒளியாகி நிலவுவது அன்பாகும். இந்த அரிய குணமின்றி வாழ்பவர் பட்டமரத்தினுங் கடையரேயாவர். அன்பு மிருகம் பறவை முதலியவற்றினும் பரவி அவைகளின் மகிழ்வுக்கு ஏதுவாயிருப்பதை நாம் வெளிப்படையாகக் காணலாம். அன்பினுடையாளத்தைக் கண்ணூகிய உறுப்பின் வழியே திருவள்ளுவர் விளக்கினூர். இன்னல் கண்டுழிக் கண் கலுழும்.

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாள் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

அன்பு ஒருவனது உள்ளத்தினின் றும் பெருக்கெடுத்து, பிதா மாதா மனைவி, பிள்ளை, சுற்றத்தவர் என்ற இன்னோரன்னவர்களிடத்தும்,அதன் பின், தனது நாட்டவர் தேசத்தவர் முதலாயினேரிடத்துங் (குதி) கொண்டோடிப் பரவி யாவரையுந் தன் மயமாக்குகின்றது. உடலையும், அதனேடு சம்பந்த முடையவர்களையும் நாம் அன்

பானே விரும்புகின்றோம். காக்கை, புறா முதலிய பறவைகள் அன்பினாலே, தத்தங் குஞ்சுகளுக்கு இரை கொடுத்துப் பாதுகாக்கின்றன. "காக்கைக் குந் தன்குஞ்சு பொன் குஞ்சு" என்று பழமொழி யுண்டு.

அன்பு கடவுள் மாட்டுப் பதியும்போது பக்தி என்று கூறத் தகும். பக்தி என்பதை விளக்கும் போது எப்போதும் கடவுளுடைய திருவடியைப் பற்றி இருப்பது என்று சிவானந்தலகரியில் கூறப்பட்டிருக்கின்றது. பிதா மாதாக்களிடத்தும் புத்திரனிடத்தும் பற்று என்று சொல்லக் கூடிய தாக அன்பு நிகழும். மனைவியிடத்து அது காதல் என்ற பேரடையும். பொருள்களினிடத்ததாகும் அன்பு, ஆசை என்ற பேருடன் இயலும். எப்ப டித் துருவியாராய்ந்தாலும் அன்பு ஒப்பற்ற துணை யாகி மக்களையும், ஏனைய உயிர் வகைகளையும் இன் புறச் செய்கின்றது என்பது மிகையாகாது. கட வுள் அன்புக்கு எளிவந்தவர். அடியார்க் கடியவர் என்று கூறப்பட்டதெல்லாம் அன்பின் வயத்த ராதலை விளக்கவேயாம். "அன்பே சிவமாவதாரு மறிந்த பின் அன்பே சிவமாயமர்ந் திருந்தாரே" என்பது திருமூல யோகிகள் திருவாக்கு.

இக்காலம் வன்பானே வீரமுழக்கம் செய்யச் சிலர் முன்னிற்பர். இது தவறாகும். திருநாளைப் போவார் போன்ற மெய்யடியார்கள் அகங்கா

ரத்தை யடக்கி அன்பைப் பெருகி ஆநந்த நடராஜப் பெருமானை யடைந்தனர். மெய்ஞ்ஞான நிலையில் சாதி மதச் செருக்குக்கள் தலைகாட்ட மாட்டா. ஆகவே நாம் அன்பை வளர்த்து இன்ப வாழ்க்கை நாடுதலே முக்கிய கடமையாகும். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும், சுவாமி விவேகானந்தாவும் அன்பின் வளர்ச்சியால் பராசக்தியைப் பணிந்து துன்பகல் வாழ்வு நடாத்தியதை நாம் மறக்கக் கூடாது.

"அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே."

—தாயுமானவர்.

சிபிச்சக்ரவர்த்தி தனது உடல் முழுவதையும் புரு ஒன்றன்பொருட்டு நிறுத்து நல்கியது போன்பன்றோ! இதனையே கருணை என்பர். நாமும் வாயில்லாப் பிராணிகளுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தலும், தேவதைகளுக்கென்று பிராணிகளை வதையாதிருத்தலும் இப்பிறவி நலமடைய ஏதுவாகும். சிறுவர்கள் அன்பு, அடக்கம், ஒழுக்கம், பரோபகாரம் முதலிய பல துறைகளிலும் படித்து பழகி நம் நாட்டை முன்னேற்றமடையச் செய்வார்களாக.

ரு. அறம்

அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தல். பாவத்தை அற்றுப்போகச் செய்தலால் அறம் என்னும் பதமே நற்பொருள் காட்டி நிற்கிறது. இதற்கெதிராக மறம் என்ற சொல் இருப்பதறிக. அறஞ் செய்யவேண்டும் என்று வேத முதலிய நூல்களும் நுவலும். ஔவையார், பாலர் மனனஞ் செய்யும் சிறு நூற்பாவில் "அறஞ்செய விரும்பு" என்று கூறினர். அறம் என்னும் தமிழ் மொழிக்கு வடநூலார் தர்மம் என்பர். தருமம் என்பது தவறாது செய்ய வேண்டியது என்று அர்த்தமாகும்.

> தர்மஞ்சர: தர்மாத் பரம் நாஸ்தி
> தர்ம: சர்வேஷாம் பூதாநாம் மது.

(தர்மத்தைச் செய்யுங்கள். தருமத்தின் மேலானது ஒன்றுமில்லை; எல்லா வுயிர்களுக்கும் இனிமை யளிப்பது அதுவேயாகும்.)

இன்னும் "தருமம் தலைகாத்தது" என்று கர்ணனின் அருங்கொடை விளங்கிய காலம்முதல், அவன், அர்ச்சுனன் பாணத்தால், முடி இழந்து தலை தப்பியதான காலம்வரையிலுள்ள அறச் செயலை விளக்கி நிற்கின்ற ஒரு மொழித் தொடருண்டு.

கோயில் கட்டல், நந்தனவனம் வைத்துக் கடவுட் பூசைக்குப் புஷ்பம் நல்கல் முதலிய பதியறங்களும், சத்திரம், தண்ணீர்ச்சாலை முதலியவற்றால் ஆன்மகோடிகளுக்கு இதம்புரியும் பசு அறங்களும், சுற்றத்தவர், உறவினர் நலம் நாடிச் செயும் பாச அறங்களும் தகுதியும், கால நிலையும் நோக்கிச் செய்யலாம். எத் தருமங்களினும், புகழன்றிச் சிறந்த சிவ புண்ணியங்கள்தான் உயிர்க்கு உறுதுணையாகவுள்ளன. அறம் வளரப் பாவந் தேயும்; பாவந் தேய அஞ்ஞானம் நீங்கும்; அஞ்ஞானம் அகல மெய்ஞ்ஞானோதயமாகும். மெய்யறிவு தலைப்படவே, நித்திய அநித்தியப் பொருள்களின் கூறுபாடுணர்ந்து, சற்சங்கஞ் சார்தலும், நித்தியராகிய கடவுளை இடையீடின்றித் தியானித்தலும் உளவாம். இன்ப வாழ்வு வேண்டிச் சற்குருவைத் தேடி, அவரருளானே மலபரிபாகமும், சத்திநிபாதமும் கைவரச் சிவானுபூதிமானாக அவ்வாத்மா திகழும். ஆகவே, மனம், வாக்கு, உடல்களின் தூய்மையுடன் சிவ புண்ணியங்களைச் செவ்விது செய்தல் ஆவசியகமாகும்.

> "அன்றறிவா மென்னா தறஞ்செய்க, மற்றது
> பொன்றுங்காற் பொன்றாத் துணை"

இன்னும் முப்பத்திரண்டறங்கள் ஆன்றோர் நூல்களில் காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களை மட்டும் ஈண்டுத் தருவாம்.

1. ஆதுலர்க்குச்சாலை அமைத்தல்.
2. ஓதுவார்க்கு உணவு நல்கல்.
3. அறுவகைச் சமயத்தவர்க்குப் போசனமளித்தல்.
4. பசுக்களுக்குத் தீனி கொடுத்தல்.
5. கைதிகளுக்கு உணவு கொடுத்தல்.
6. ஏழைகளுக்குப் பிச்சை இடல்.
7. யாத்திரை செய்வோருக்குப் போசன மீதல்.
8. அனாதைகளுக்கு அன்னமிடல்.
9. மகப் பெறுவார்க் குதவிபுரிதல்.
10. குழந்தைகளை வளர்த்தல்.
11. குழந்தைகளுக்குப் பால் கொடுத்தல்.
12. அநாதப் பிணஞ்சுடுதல் ; புதைத்தல்.
13. ஏழைகளுக்கு வஸ்திர மளித்தல்.
14. தாம்பூலத்திற்குச் சுண்ணம்பு கொடுத்தல்.
15. நோயாளர்க்கு மருந்து கொடுத்தல்.
16. ஏழைகளின் துணி வெளுக்க வண்ணான் கூலி கொடுத்தல்.
17. தரும க்ஷௌரஞ் செய்வித்தல்.
18. கண்ணாடி நல்கல்.
19. ஏழை மங்கையர்க்குக் காதோலை கொடுத்தல்.
20. கண்ணோய்க்கு மருந்து இடல்.
21. ஏழைகளுக்குத் தலைக்கெண்ணெய் கொடுத்தல்.
22. விவாகம் ஆகாத புருஷர்களுக்குக் கலியாணஞ் செய்துவைத்தல்.
23. ஏழைகளுடைய துன்பத்தை அகற்றல்.
24. வேனிற்காலத்தில் தண்ணீர்ச்சாலை அமைத்தல்.
25. சத்திரங் கட்டிவைத்தல். (ஏழைகளுக்குத் தங்க இடங் கொடாமை பாதகமே!)

26. நடைசாலை, குளம் முதலியன ஏற்படுத்தல்.
27. சோலைகளையும், தெருப்பக்கங்களில் நிழல் மரங்களையும் உண்டாக்கல்.
28. ஆவுரிஞ்சுகல் நாட்டல்.
29. பிராணிகளை வளர்த்தல்.
30. பசுக்கள் பொலியச் செய்தல்.
31. பொருள் கொடுத்தாவது பிராணிகளைக் காத்தல்.
32. கன்னிகைகளை முறைப்படி பொருளீந்து விவாகஞ் செய்துவைத்தல்.

இன்னும் அறங்கள் பலவாக விரியும். மக்கள் தத்தங் கடமை இவையெனநாடிச் செய்து நலமடைதலே முறையாகும்.

௬. கல்வி

கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றல். படித்தல், கற்றல், ஓதல் முதலியன ஒருபொருளன. கற்றற்குரிய நூல்களும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்களை நனி நல்கக்கூடியனவா யிருத்தல் வேண்டும். பொருளொன்றானே அறமும் இன்பமுமெய்தலாம். அதனால் பொருள் இடையினின்று நிலவவைத்தனர் பெரியோர். வீடு சிந்தையும் மொழியுங் கொண்டு அளவிடற்கரிய பேரின்பமாகும். "அற்றது பற்றெனின் உற்றது வீடு" என்பது ஆராயத்தக்கதாம். ஆசையே பிறவிக்கு வித்தாதலின், அதனை நீக்கின் பெறுவது பெரும் பேரின்பமாகும். கல்வியானன்றி வீடுபேறடைதல் கூடாது. "கல்லா மூடர் கருத்தறி யாரே" என்பது திருமூலனார் திருவாக்கு. "கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியை" என்பதும் கருதத்தக்கதாம். ஆகவே, கல்வி இயற்கையறிவை வளர்த்தற்குத் துணையான செயற்கையறிவாகவுள்ளது. மக்களும் மாக்களும் ஒரேவிதமான நிலையில் இருக்கவில்லை.

பகுத்தறிவுதான் மக்களை உயர்த்துவது. அது நல்லதையும் தீயதையும் நன்குணர்ந்து, தீயதை விட்டு நல்லதை நாடிப் புரிதலால் மேம்பாடு காட்டும். நன்னூற் பயிற்சியால் இன்பமும், பெருமை

யும், கீர்த்தியும் மிளிர்வடைகின்றன. தேசந்தோறும் பாஷைகள் வேறுபாடுறுகின்றன. மக்களின் நாகரிகம், குணம் தொழில்களும் பல பாகுபாடுடையன. இவைகளைச் சரித்திர நூல்கள் புலப்படுத்தும். நமது பாரதநாட்டிலும் பல மொழிகள் நிலவுகின்றன. தமிழ் சம்ஸ்கிருதம் என்பன மிகப் பழமையுடையன. அரச பாஷையாக இப்போது ஆங்கிலம் வழங்கப்படுகிறது. தமிழகத்தாரும் ஆங்கில பண்டிதர்களாக இருக்கலாம். சுவபாஷையை அலட்சியஞ் செய்வது யுக்திக்குப் பொருத்தமாகாது. தமிழ்ப் பெருமொழியை நன்றாகப் பயின்றபின் வேறு மொழிகளையுங் கற்று வல்லவராதலினால் குற்றம் யாதுமில்லை. மூலைகளில் தமிழ்மொழி ஒதுக்கப்பெறுதிருக்க ஒவ்வொரு தமிழ் மகனும் முன்னி முயற்சிக்க வேண்டும்.

கொல்லத் தெருவில் ஊசி விற்றவாறுகத் தமிழர்க்குப் பிறநாட்டவரும், பிறமொழி கற்றோரும் புத்தி புகட்ட வருவது ஆச்சரியமல்லவா? தமிழகத்தார் பெருமை மறைந்துவிட்டதே! தமிழ் நாட்டவர் என்று பேர்மாத்திரம் இருந்தாற் போதுமா? நமக்கு வெட்கமில்லையே! சற்று யோசியுங்கள்! விழியுங்கள்! விழியுங்கள்!!

சீர்திருத்தம் என்று எங்கும் ஆடம்பரம் நடக்கிறது. மொழியும், அதனுல் மக்களறிவுமன்றோ திருந்தவேண்டும்! எத்தனை தமிழ் மகன் வித்

தையினால் உத்தம கீர்த்தியை நிலைநாட்டியுள்ளான்? பரதேச மொழி பேசுவதும், பரதேச உடையணிவதும், பரதேச மனிதனைப்போலப் பாவனை செய்வதும் மதியீனமல்லவா? யாரையும் நாம் இகழவில்லை. நமது பெருமையை நாம் இழந்து, "கண்ட பாவனையிற் கொண்டை முடிப்பது" என்றபடி நடப்பதால் நம்மைப் பிறர் இழிவாக எண்ணுகின்றனர் என்பதுதான் விசனகரமாகும். "காகம் அன்ன நடை நடக்க எண்ணித் தன் நடையுங் கெட்டது" என்ற பழமொழியும் சில ஆங்கிலத் துரைகளுக்கு உபமானமாக நிற்கின்றது. அறிவு, மொழித் திறத்தினாலும் வளரும். தமிழ் நாட்டில் ஹிந்தி பொது மொழியாக வேண்டும் என்பாருஞ் சிலரே. தமிழகப் பெரியீர்! சற்றுக் கடைக்கணோட்டஞ் செய்மின்! புராதன நூல்களை நன்கு பயிலவும், அதற்கு உறுதுணையாக விஞ்ஞான நூல்கள் (மேனாட்டு மொழியிலிருந்து பெயர்த்தெழுதப் பெற்றவைகள்) அறிவின் ஆற்றலுக்கு ஏற்ற துணையாகும். பாரத இராமாயண நூல்களும், புராணங்களும், சிவஞானபோதம் முதலியனவும், தேவார திருவாசக திருவாய்மொழி முதலியனவும் படித்து இனிமைமையும், உதார குணமும், பக்தியும், வீரமும், கருணையும் என்ற பேரணிகளுடன் மாணவர் மாட்சியடைந்தால், மதிப்பரும் வேறு பொருளும்

அன்னோர்க்கு அணியாக வேண்டுமோ? வேண்டாமே! பெரியார் இவற்றைச் சிந்தித்துச் செல்வச் சிறுர்களைக் கல்வி கேள்விகளில் வல்லவராக்க முன்வருவார்களாக.

இனி, வித்தியா சாலைகளை கிராமந்தோறும் நிறுவற்பாலன. வித்தியாதானமே மிகவுமுயர்ந்தது. ஆலயமும் வித்தியாலயமும் சம்பந்தம்பெற்ருல் சமயநெறி தழைத்தோங்கும்; பக்தி மிளிரும். ஆகவே, மக்கட்பிறப்புடையார் கல்வியறிவு ஒழுக்கங்களில் விழுப்பங்காட்டி முன்னேற்றம் பெறுவார்களாக.

1. "வித்யாநாம நரஸ்யரூப மதிகம்"

2. "வித்யாததாதி விநயம்
விநயாத்யாதி பாத்ரதாம்!
பாத்ரத்துவாத் தநமாப்னோதி
தநாத் தர்மந் தத: சுகம்"

3. "அந்நதாநாத் பரம் நாஸ்தி
வித்யாதாநந் ததோதிகம்!
அந்நேந் க்ஷணிகம்
வித்யா யாவத்ஸந்த ஸாமிவ"

4. "ஒருமைக்கட் டான்கற்றகல்வி யொருவற்கெழுமை
யெழுபிறப்பு மேமாப் புடைத்து"

5. "கற்கக் கழிமட மஃகும்"

6. "அறிவகற்றுங் கல்வி" (இங்கே அகற்றும் என்பது அறிவை விசாலிக்கச் செய்தலின் மேற்று)

7. "இருவிழி கள்வாண் முகத்தி லிருந்தாலும்
வானிரவி யெழுந்தா லன்றிக்
கருதுநிலப் பல்பொருளுங் காண்ட லரிதா
முலகிற் கண்போல் யார்க்கும்
பெருகிய செல்வமு மறிவும் பெற்றுணு
நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்
திருவளர் புண்ணிய பாவ மிம்மை
மறுமையும் வீடுந்தெரியா வன்றே"

8. "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

9. "கற்றதனு லாயபய னென்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழஅ ரெனின்"

10. "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

சுபமஸ்து.

திருப்புகழ்

முந்து தமிழ்மாலை கூடக் கோடி
சந்தமொடு நீடப் பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி யுழலாதே
முந்தை வினையே வாராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தானென் றுளமீதே
திந்திமிதி தோதி தீதகுத் தீதி
தந்த தனதான தானத் தான
செஞ்சகுண சேகு தானத் தோடு நடமாடுஞ்
செஞ்சிறிய கால் விசாலத் தோகை
துங்கவநு கூல பார்வைத் தீர
செம்பொன் மயின் மீதிலே யெப்போது வருவாயே!

அந்தமறை வேள்விக் காவற் கார !
செந்தமிழ் சொல்பாவின் மாலைக் கார !
வண்ட ருபகார சேவற் கார ! முடிமேலே
அஞ்சலி செய்வோர்கள் நேயக் கார !
குன்றுருவ வேவும் வேலைக் கார !
வந்த வெகுவா னரூபக் கார ! வெழிலான
சிந்துரமின் மேவும் போகக் கார !
விந்தை குறமாது வேளைக் கார !
செஞ்சொ லடியார்கள் வாரக் கார ! வெதிரான
செஞ்சமரின் மேவு மாயக் கார !
துங்கரண சூர் சூறைக் கார !
செந்திநகர் வாழு மாண்மைக் காரப் பெருமாளே!

பெரியார் சிலரின் கருத்து வருமாறு :—

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில்
தமிழ்ப்பகுதித் தலைவராக விளங்கும் மகா-ா-ா-ஸ்ரீ
S. சோமசுந்தர பாரதியாரவர்கள், M.A., B.L.
எழுதியவதை ஈண்டுத் தருகின்ருேம்.

கீழச்சிவபுரி - ஆவினிப்பட்டியில் தண்டமிழாசானுகத் தமிழறிவுறுத்திவரும் திருவாளர் - இரத்தினேஸ்வரய்ய ரவர்களை நன்கறிவேன். மதுரைத் தமிழ்ச்சங்க மாதப் பத்திரிகையான "செந்தமிழில்" இவர்கள் எழுதி வெளியிட்ட கட்டுரைகளையும், மற்றுமிவர்கள் வெளியீடு களையும் படித்து மகிழ்ந்திருக்கின்றேன். இவர்கள் முறையாகப் பல அரிய தமிழ் நூல்களையும் பயின்று தெளிந்து, மாணவருக்குப் பயிற்றிக் கல்வித் துறையில் ஆழமும், அகலமும் படப் பழகும் அழகியலுடையார்; செவ்விய இனிய சொல்லாற்றலும், உரைநடை நலனு மாராய வல்லுநர்; மதிநுட்பம் நூலோடுடையார் புலமை போற்றித் தமிழ்த்துறை முற்றிய பெருநாவலர் நட்புற வுச் செறிவால் மாண்பு சான்ற தமிழ்ச்சுவை பெருக்கித் தாமின்புறுவ துலகின்புறக் காட்டியூட்டும் நல்லியல் புடையார்.

இன்னும் பல்லாண்டு இவர் இனைய பெருந் தமிழ்த் தொண்டாற்றித் தம் புகழும், தமிழ்வளமும் பெருக வாழுமாறு பல்லாண்டு கூறுகின்றேன்.

எஸ். எஸ். பாரதி,
7-9-34.
தமிழ்ப் புரொபஸர்,
அண்ணுமலை யுனிவர்ஸிட்டி,
அண்ணுமலைநகர்.

அண்ணாமலை யுனிவர்ஸிட்டி, தமிழ் விரிவுரையாளர்
மகிபாலநகர் - பண்டிதமணி,
திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் கருத்துரை.

யாழ்ப்பாணத்து உடுவில்: தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரையரவர்களை யான் பல்லாண்டுகளாக அறிவேன். இவர்கள் தமிழ் இலக்கிய இலக்கண சைவ நூல்களை நன்கு கற்றவர்; மாணாக்கர்களுக்கும் அவையத்தார்க்கும் விளங்க எடுத்துப் பிரசங்கம் புரியும் ஆற்றல் வாய்ந்தவர்; சிறந்த சிவபக்தியும் சைவ சீலமும் உடையவர்; சிவபூசையை இடையறாது செய்துவரும் ஆர்வமுடையவர்; தென்னிந்தியத் தமிழ்ப் புலவர் பலரோடும் நன்கு பழகி அன்னார் நன்கு மதிப்பும் பெற்றவர்; நாட்டுக்கோட்டைத் தனவைசியர் நகரங்களிலுள்ள பல கல்விச் சாலைகளிலிருந்து மாணாக்கர்க்குப் பாடம் போதித்து வந்தவர்; இப்பொழுதும் ஆசிரியராக இருந்து வருகின்றார்; இத்தகைய பண்டித ஸ்ரீ ஐயரவர்களைச் சிறந்த கல்லூரிகளில் ஆசிரியராக நியமனஞ் செய்யின் உண்மையுழைப்பை மேற்கொண்டு மாணாக்கர் நல்லறிவு வளர்ச்சிக்கு ஏற்ப நன்னூல்களைப் பயிற்றி நற்பெயர் பெறுவரென்பது என் கருத்து.

அண்ணாமலைநகர்,
30-9-34.

இங்ஙனம் :
மு. கதிரேசன்.

உ

இவ்வசன நூலாசிரியரின் செந்தமிழ்க் குருவாகிய

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம்

வித்வசிரோமணி

ஸ்ரீமத் : அ. குமாரசுவாமிப் புலவரவர்கள்

அளித்தது

வ. மு. இரத்தினேசுவரையர்,

இவரை நான் நெடுநாளாக அறிவேன். இவர் உடுவில் வாசர்; சுன்னுகத்திற் பிரசித்திபெற்ற வித்வானுயிருந்த வரதபண்டிதரின் வழித்தோன்றல்; வண்ணூர்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் என்னிடம் சில் சில இலக்கியமும், இலக்கணமுங் கற்றவர்; வாக்கியத் தொடையிலும், சைவப் பிரசங்கத்திலும் வல்லவர்; சித்தாந்த சாத்திரத்திலும் பயிற்சியுடையவர்; மாணவகர்க்குக் கல்வி கற்பிப்பதிலும் வல்லவர்.

சித்தார்த்திளு
ஆவணிமீ
உஎவ

இங்ஙனம் :

அ. குமாரசுவாமிப் பிள்ளை.